# ஆரதி பாடல்கள்

## புனர்வசு வண்ணம்

(கலிநிலைத்துறை)
பண்: குறிஞ்சி (ஹரிகாம்போதி)
திருச்சிற்றம்பலம்

கண்ணா லுனது கதிர்முக நாங்கள் காணப்பெற்
றண்ணால் கண்ணா லாம்பய னார்ந்தன மென்பாரால்
எண்ணா நின்றா ரிதயத் தொளிரும் ரமணப்பே
ரண்ணா மலையான் புனர்வசு நன்னாளதுவண்ணம்.

இதாவொரு கோடி யினர்போ லொளிரும் ரமணப்பே
ருதார குணாள னுவப்பது நோக்கி யுவப்பாரால்
சுதாவடி வான சொரூபா னந்த சுயஞ்சோதி
யதாவெமை யாண்டான் புனர்வசு நன்னாளதுவண்ணம்.

குலவுந் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்
தலைவன் பேச்சே தம்முண வாகத் தழைப்பாரால்
இலகும் புகழா லெண்டிசை போர்த்த ரமணன்பேச்
சலகில் களிப்பாம் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

பொருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்
தெருளின் வண்ணந் திருவின் வண்ணந் திகழ்வண்ணம்
இருளின் வண்ண மிலையாம் வண்ணம் ரமணன்கூ
ரருளின் வண்ணம் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

மீட்சியின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்
காட்சியின் வண்ணங் கேள்வியின் வண்ணங் கடவுண்மாப்
பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்றாளுக்
காட்சியின் வண்ணம் புனர்வசு நன்னாளதுவண்ணம்.

தேர்கலை யெல்லாந் தேறினுஞ் சிந்தை தெளியாது
நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்
சார்கதி காட்டுஞ் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

ஆதர மிக்க வடிய ரகக்கா ரகன்றோட
மூதுரை யாலே முகவுரை யோதி மோனஞ்சேர்
போதனை யாலநு பூதி புணர்க்கும் புலவோன்ஞா
னாதவ மெய்யன் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

விதானங் கட்டித் தொங்கல் விட்டு விநோதஞ்சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலு மோர்குற் றேவ லியற்றப் பெறாமோவென்
றதேநினை வாவர் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

மாதவர் வேதியர் மந்திர மோதி வழுத்துவார்
கோதையர் தாந்தங் கொழுந ரொடும்பின் குறுகுவார்
பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்
ஆதர நாஞ்செய் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

தாழிசை வண்ணஞ் சந்த விருத்தஞ் சாற்றுவார்
ஏழிசை வாண ரியாழொடு வீணையி லேற்றுவார்
தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணந் தூவுவார்
வாழி ரமணன் புனர்வசு நன்னா ளதுவண்ணம்.

**வாழ்த்து**

மோக மொழிக்கும் முனிவன் றிருவாய் மொழிவாழி
சோக மகற்றுஞ் சுத்தாத் துவிதச் சுடர்வாழி
ஏக சொரூப ரமணன் கருணை யியல்வாழி
காக முறவு கலந்தாற் போலுங் கணம்வாழி.

திருச்சிற்றம்பலம்

# வேண்டற் பதிகம்

(ஆசிரியவிருத்தம்)
பண்: குறிஞ்சி (ஹரிகாம்போதி)
திருச்சிற்றம்பலம்

ஆத்த னேயடி யடைக வென்னெனை
யண்டர் கண்டபொன் னம்ப லத்திருக்
கூத்த னேயடி குறுக வென்னெனைக்
குலவு மன்பரைப் பவித்தி ரஞ்செயும்
தீர்த்த னேயடி சேர்க வென்னெனைச்
செம்பொ னாடரிந் திரன யன்முதல்
வேத்த வைக்கொரு விளக்க மாநடு
வீற்றி ருந்தருள் வேங்க டேசனே.

வழுக்க ளைந்தசீர் வாத வூரர்தம்
வாய்மை சேர்மணி வாச கத்தொடு
பழிக்க நின்றவென் பழுது சேர்சொலும்
பாந்த மாவுளம் பற்றி நின்றனை
தெழிக்க வேற்புடைத் தொன்று நின்னெதிர்
சேர்ந்த மாத்திரத் தின்கண் வேங்கட
செழிக்க லாயது செம்பொன் மேருவைச்
சேர்ந்த காக்கையுந் திகழ்வ தொக்குமே.

பெய்வ தாயநின் பேர ருண்மழைப்
பேறு நோக்கினே னூறு மாய்க்கவே
நைவ தாகவிந் நானி லத்துநா
னலிந்த ழுங்குதன் ஞாய மோசொலாய்
தெய்வ நாதனே சிறிய நாயினுந்
தீன னாயினேன் றீமை தீர்ந்தெழுந்
துய்வ தாகவெற் குறுதி யொன்றரு
ளுடைய வேங்கட வுதார சீலனே.

இளைத்து நின்றுகா ரிருட்கு டைந்தியா
னேங்கு றாவணந் தாங்கி நின்றவா
அளத்த லாகலா வழற்பி ழம்பனே
யாண்ட வேங்கட வடிய டைந்தவென்
உளத்தி டைவிடா துன்ன டிச்சுட
ரோங்க லாகவாங் குவந்து றைந்தருள்
முளைத்து மூண்டமா மோக வாணவ
முசித்து நான்முழு மோன முற்றவே.

ஆதி மானவா நோக்க மாருயிர்க்
காக்க மாற்றுபே ராற்றல் சான்றவா
சோதி வானவா சூக்கு மத்தெதிர்
சூது வல்லிருட் சூனி யங்கெட
நேதி யென்றுபொய்த் தத்து வம்மெலா
நீக்கு மவ்வுசா நெறியி னின்றொளிர்
நீதி வேங்கட நிகழ்த்து வாயென்றன்
னெஞ்சு ளுன்னுடை நிசசொ ரூபமே.

காண வேண்டுநின் கருணை யார்முகங்
களிக்க வேண்டுமென் கருத்து முற்றுறப்
பூண வேண்டுநின் பொன்ன டித்துணை
பொலிய வேண்டுமென் சென்னி பொற்புற
மாண வேண்டுமெய் யடியர் மாட்டுநின்
மாண்பு பேசியுஞ் செவிம டுத்துநான்
பேண வேண்டுமெப் பிறவி மேவினும்
பெரும வேங்கட வன்ன பெற்றியே.

அழைக்க வேண்டுநா னாவ லாயுனை
யஞ்ச லென்றெனக் கருள வேண்டுநீ
இழைக்க வேண்டுநா னியோக மென்னுளத்
திருமை யற்றெனோ டிசைய வேண்டுநீ
குழைக்க வேண்டுநான் கொடும னத்தைநின்
னருட்கு ணத்திறங் குறித்து நாடொறும்
தழைக்க வேண்டுநான் றாணி ழற்கணே
தரும வேங்கடத் தந்தை தாயனே.

இருமை யற்றநின் னொருமை யன்றிமற்
றிம்மை வேண்டலேன் மறுமை வேண்டலேன்
அருமை யாயநின் னடித்த லத்துவாழ்
வதனை யன்றிமற் றியாவர் வேண்டுவார்
எருமை போலநா னிவ்வ ளற்றுல
கிடைக்க ளிப்பதற் கினியொ ருப்படேன்
பெருமை யார்ந்தவேங் கடபி ரானருட்
பேறு பெற்றிடப் பேணு முள்ளமே.

கேழி லாப்பரஞ் சோதி மெய்யுடைக்
கேழி லாப்பரங் கருணை சேரற
வாழி யந்தண வான்ற கேள்விசே
ராதி தேசிக வரங்க நாடகப்
பாழி லிக்கொடும் பாவி யேன்படாப்
பரிசு நல்கினை பாவ நாசக
வாழி யென்னையாட் கொண்ட வேங்கட
வாழி நின்னருள் வளமை யூழியே.

வாழி மன்னுயிர்த் தொகைவி ருந்துண
வருண்ம துப்பொழி வனச லோசனம்
வாழி நின்னெழில் வாண்மு கத்திரு
வாய்ம லர்ந்தருண் மதுர வாசகம்
வாழி வண்டமிழ்ப் பரிசில் வாணருண்
மகிழ்ந்து கூறுமுன் வாய்மை சேர்புகழ்
வாழி வேங்கட வன்ன வார்கழல்
வளர்நி ழற்கணிவ் வைய முற்றுமே.

பொலிக நின்பொலங் கோயி லிவ்வகன்
புவன மெங்குமென் றென்றும் வேங்கட
பொலிக நித்தியப் பூசை மங்கலப்
புனைசி றப்பொடும் பணிபு துக்குவோர்
பொலிக வப்புனி தால யங்களைப்
புந்தி யார்ந்துபல் பொற்பு றுத்துவோர்
பொலிக வாயிடைப் போந்து வந்தனை
புரிகு வோர்சிவ போக மார்ந்தரோ.

பொலிக வென்றுநின் புகழ்ம கத்துவம்
பொலிக நின்புனர் பூச நாள்விழா
பொலிக வவ்விழாப் பொலிய வாற்றுவார்
பொலிக வவ்விழாப் பொலிய நோக்குவார்
மலிக மாதமும் மாரி மாநிலம்
மலிக தானதன் மங்க ளெங்கணும்
மலிக வேங்கட மன்னு யிர்த்தொகை
மனந்தொ றும்மல ரடித்தி யானமே.

திருச்சிற்றம்பலம்

# வாழ்க ஸ்வயம் ப்ரகாசம்

வாழ்க ஸ்வயம் ப்ரகாசம் வாழ்க வாழ்கவே
சூழ்க சுத்தாத்ம சக்தி சூழ்க சூழ்கவே

ஏழுலகும் ஜீவன் முக்தி இன்பம் பொங்கவே!
இதயமாகும் இறைவ னாகி எல்லாம் ஓங்கவே!
பாழ்மனத் தகந்தை வாழ்வு பாழ்பட் டொழியவே!
பரம சச்சிதானந்தாத்ம பால் பொழியவே!

தட்டில்லாத நித்ய ஜீவ தத்வம் ஓங்கவே!
தன் மயத்திற் சின்மயம் தழைத் திலங்கவே
எட்டுத் திக்கும் ஹம்ச ஸோஹம் எதிரொளிக்கவே
எல்லாம் பிரம்மம் என்னும் உண்மை இறை வகிக்கவே